நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

**முன்னிலை– திருமதி. ஞா. லிசி, B.A.B.L, (Hons), M.L.,**

நீதித்துறை நடுவர், திருவாரூர்

2026–ம் வருடம் ஏப்ரல் திங்கள் 20–ம் நாள் திங்கட்கிழமை

**எஸ்.டி.சி.எண். 856/2025**

**CNR No:TNTV02-001857-2025**

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,
திருவாரூர் நகர காவல் நிலையம்,
குற்ற எண் 281/2023
சட்டப்பிரிவு 8(c), 20(b)(ii)(A) NDPS Act

... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

**சார்லஸ் நெப்போலியன்**, வயது 40/2023
த/பெ. பரிசுத்தம்
பேபி டாக்கீஸ் ரோடு,
சீராத்தோப்பு,
திருவாரூர். ..........எதிரி

| | |
|---|---|
| எதிரிகளின் பதில்கள் | குற்றவாளி இல்லை. |
| நீதிபதியின் தீர்மானம் | எதிரி மீதான சட்டப்பிரிவு 8(c), 20(b)(ii)(A) NDPS Act–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை. |
| தண்டனை அல்லது உத்தரவு | **முடிவாக,** எதிரிக்கு எதிரான சட்டப்பிரிவு 8(c), 20(b)(ii)(A) NDPS Act ன் கீழான குற்றம் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரிக்கு எதிரான சட்டப்பிரிவு 8(c), 20(b)(ii)(A) NDPS Act ன் கீழான குற்றத்தை பொறுத்து எதிரி குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் தடயப்பொருள்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ள சி.பி.எண்.63/2024 தடயப்பொருளை நீதிமன்ற மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது. |

இந்த வழக்கு **22.09.2025** ஆம் நாளன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசின் சார்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V. J. ராஜா அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை

செய்தும் இன்று (20.**04.2026**) இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்.......

**தீர்ப்புரை**

11.05.2023-ம் தேதி 18.00 மணியளவில் திருவாரூர் நகர காவல் நிலைய சரகம் திருவாரூர் பேபி டாக்கீஸ் ரோடு அருகே இவ்வழக்கின் எதிரியான சார்லஸ் நெப்போலியன், த/பெ.பரிசுத்தம் என்பவர் சுமார் 400 கிராம் எடையுள்ளா கஞ்சா துகள்களை பொட்டலமாக போடடு சட்டவிரோதமாக சில்லரை விற்பனை செய்த குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 8(c), 20(b)(ii)(A) NDPS Act-யின்படி தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளதாக திருவாரூர் நகர காவல் நிலைய உதவி ஆய்வாளரால் இந்நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இந்த வழக்கின் எதிரி இந்த நீதிமன்றத்தில் ஆஜரானதும் அவருக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் **கு.வி.மு.ச பிரிவு 207**-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3)** குற்றப்பத்திரிக்கையில் எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பொறுத்து, இரு தரப்புக்கும் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, இரு தரப்பையும் கேட்டும், எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை குறித்து ஆவணங்களைப் பரிசீலனை செய்த வகையில் எதிரி மீது 8(c), 20(b)(ii)(A) NDPS Act-ன் கீழ் குற்ற செயல்களை செய்திருக்கலாம் என்பதற்கான முதற்நோக்கு சாத்தியக்கூறுகள் இருந்ததால் மேற்படி குற்றச்சாட்டுக்கள் குறித்து **குவிமுச பிரிவு 240**ன்படி எழுத்து மூலமான குற்றச்சாட்டுக்கள் தமிழில் விளக்கி வினவியபோது அதை எதிரி மறுத்து, எதிர்வாதம் செய்வதாக கூறி சாட்சிகளின் விசாரணைக்கு வேண்டியதன் அடிப்படையில் அரசுத் தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, விசாரணை தொடங்கப்பட்டது.

**4)**குற்றப்பத்திரிக்கையில்கண்ட சாட்சிகளின் பட்டியலிடப்பட்ட சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசுத் தரப்பு சாட்சியத்திலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:-**

(i) கடந்த 11.05.2023ம் தேதி திருவாரூர் நகர காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது உதவி ஆய்வாளர் மற்றும் முதல்நிலை காவலர் ஆனந்த்குமார் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் அவர்கள் முன்னிலையில் அவருக்கு கிடைத்த ரகசிய தகவலை பெற்று காவல் துறை துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து பின்னர் உதவி ஆய்வாளர் தியாகராஜன் ஆகியோருடன் நிலைய எல்லைக்குட்பட்ட திருவாரூர் பேபி டாக்கீஸ் ரோடு அருகே மாலை 18.00மணிக்கு கண்காணித்து வந்தபோது சந்தேகத்திற்கு இடமான வகையில் நின்றுக் கொண்டிருந்த நபர் போலீசாரை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரிக்க தங்களது பெயர் சார்லஸ் நெப்போலியன், த/பெ. பரிசுத்தம், பேபி டாக்கீஸ் ரோடு, சீராத்தோப்பு, திருவாரூர் என்று கூறினார் என்றும், அவரை சோதனை செய்ய அனுமதி கோரிய போது அவர் என்னை சோதனை இடலாம் என்று சம்மத கொடுத்தார் என்றும், அவரை சோதனை செய்த போது எதிரி சார்லஸ் நெப்போலியன் என்பவரிடம் இரண்டு பொட்டலம் கஞ்சா இருந்தது என்றும், அதை எடை மிஷனில் எடை பார்க்க சுமார் 400 கிராம் எடையுள்ள கஞ்சா போதை பொருள் இருந்தது என்றும், அவரை விசாரிக்க கஞ்சா போதை பொருட்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாக கூறினார் என்றும், அவர் அந்த கஞ்சாவை வைத்திருக்க எந்தவிதமான அரசு அனுமதியோ, உரிமமோ இல்லை என்றும், மேற்படி எதிரியை உதவி ஆய்வாளர் 18.20 மணியளவில் குற்றக்காரணம் கூறி கைது செய்தும், எதிரி சார்லஸ் நெப்போலியன் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் 18.30 முதல் 18.45 மணிக்குள் பதிவு செய்துக்கொண்டு, அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததாலும், போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் எதிரி வசமிருந்த 400 கிராம் கஞ்சா கைப்பற்றுதல் மகசர் மூலமாக கைப்பற்றியதாகவும், அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததாலும், போலீஸ் சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தும், அதிலிருந்து தலா 100கிராம் கஞ்சாவை இரண்டு காக்கி கவரில் ஆய்வாளர் தனியாக எடுத்து இரசாயன பரிசோதனைக்கு அனுப்புவதற்காக எடுத்து வைத்திருந்தார் என்றும், பின்பு, எதிரியுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 281/2023 சட்டப்பிரிவு 8(c), 20(b)(ii)(A) NDPS Act. ன் கீழ் வழக்கு பதிவு செய்து பின்னர் புலன்விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்

**6)** அ.சா.1 முதல் அ.சா.2 அளித்துள்ள சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள பொருண்மைகள் குறித்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 313 (1) (பி) ன் கீழ் வினவியபோது எதிரி அவர்களது சாட்சியம் அனைத்தும் பொய்யானவை என்று கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை.

**7)** இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரிக்கு எதிரான குற்றம் அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? ஆம் எனில் எதிரிக்கு விதிக்கப்பட வேண்டிய தண்டனை என்ன? என்பதேயாகும்.

**8. இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்,**

எதிரிக்கு எதிரான சட்டப்பிரிவு 8(c), 20(b)(ii)(A) NDPS Actன் கீழான குற்றத்தை பொறுத்து எதிரி போதை பொருளான கஞ்சா 100 கிராம் வைத்திருந்தார் என்பது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலனை செய்ய வேண்டும்.

**<u>தீர்வு:</u>**

புகாரில் 11.05.2023–ஆம் தேதி திருவாரூர் நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.தியாகராஜன் ஆகிய காவல் நிலையத்தில் இருந்த போது கிடைத்த ரதகசிய தகவலை பெற்று காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் தகவல் தெரிவித்தும் அனுமதி பெற்றும், சிறப்பு உதவி ஆய்வாளர் 832 சந்திரசேகரன் மற்றும் முதல்நிலை காவலர் 292 ஆனந்தகுமார் ஆகியோர்களுடன் நிலைய எல்லைக்குட்பட்ட திருவாரூர், பேபி டாக்கீஸ் ரோடு அருகே மாலை சுமார் 18.00 மணியளவில் கண்காணித்து வந்த போது சந்தேகத்திற்கு இடமான வகையில் நின்றுக் கொண்டிருந்த நபர் போலிசாரை கண்டதும் அங்கிருந்து ஓட முயன்றவரை பிடித்து விசாரிக்க சார்லஸ் நெப்போலியன் வயது 40/2023, த/பெ. பரிசுத்தம், பேபி டாக்கீஸ் ரோடு, சீராத்தோப்பு, திருவாரூர் என்று தனது பெயர் விலாசம் கூறியதாகவும், மேற்படி நபரை விசாரிக்க தான் கஞ்சா விற்பனை செய்வதாகவும், அவர் மறைத்து வைத்திருந்த இரண்டு கஞ்சா பொட்டலத்தை எடுத்து கொடுத்தார் என்றும், மேற்படி கஞ்சாவை எடை பார்த்ததில் சுமார் 400 கிராம் இருந்தது என்றும், மேற்படி கஞ்சாவை வைத்திருக்க எந்தவிதமான அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாத காரணத்தால் அதே இடத்தில் எதிரியை குற்ற காரணம் கூறி 18.20

மணிக்கு கைது செய்தும், பின்பு பொது நபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தால் உடன் சென்ற காவலர்கள் முன்னிலையில் எதிரி சார்லஸ் நெப்போலியன் தானாக முன்வந்து கஞ்சாவை வைத்து விற்பனை செய்வதாக ஒப்புக் கொண்டு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 18.30 மணிமுதல் 18.45 மணிவரை பதிவு செய்தும் பின்பு அதே சாட்சிகள் முன்னிலையில் 18.50 மணிக்கு தடயத்தை மகசரில் கைப்பற்றியும், பின்பு மாதிரிக்காக சுமார் 50 கிராம் வீதம் இரண்டு பொட்டலங்களாக கஞ்சாவை தனியாக எடுத்து தனித்தனியாக ஒரு காக்கி கவரில் போட்டு SHO சீல் வைத்தும், மீதமுள்ள சுமார் 300 கிராம் கஞ்சாவிலும், SHO சீல் வைத்தும், பின்பு எதிரி மற்றும் தடய பொருளுடன் 19.00 மணிக்கு நிலையம் வந்து எதிரி மீது நிலை குற்ற எண்.281/2023, ச/பி 8(c) r/w 20(b)(ii)('A) NDPS Act ன் படி 11.05.2023ம் தேதி 19.00 மணிக்கு எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**10.** அ.சா.1 அரசு தரப்பு முதல் விசாரணையில் கடந்த 11.05.2023ம் தேதி திருவாரூர் நகர காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது தானும் தன்னுடன் பணிபுரிந்த முதல்நிலை காவலர் ஆனந்த்குமார் மற்றும் உதவி ஆய்வாளர் தியாகராஜன் அவர்கள் முன்னிலையில் அவருக்கு கிடைத்த ரகசிய தகவலை பெற்று காவல் துறை துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து பின்னர் உதவி ஆய்வாளர் தியாகராஜன் ஆகியோருடன் நிலைய எல்லைக்குட்பட்ட திருவாரூர் பேபி டாக்கீஸ் ரோடு அருகே மாலை 18.00மணிக்கு கண்காணித்து வந்தபோது சந்தேகத்திற்கு இடமான வகையில் நின்றுக் கொண்டிருந்த நபர் தங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரிக்க தங்களது பெயர் சார்லஸ் நெப்போலியன், த/பெ. பரிசுத்தம், பேபி டாக்கீஸ் ரோடு, சீராத்தோப்பு, திருவாரூர் என்று கூறினார் என்றும், அவர்தான் ஆஜர் எதிரியாவார் என்றும், அவரை சோதனை செய்ய அனுமதி கோரிய போது அவர் என்னை சோதனை இடலாம் என்று சம்மத கொடுத்தார் என்றும், அவரை சோதனை செய்த போது எதிரி சார்லஸ் நெப்போலியன் என்பவரிடம் இரண்டு பொட்டலம் கஞ்சா இருந்தது என்றும், அதை எடை மிஷினில் எடை பார்க்க சுமார் 400 கிராம் எடையுள்ள கஞ்சா போதை பொருள் இருந்தது என்றும், அவரை விசாரிக்க கஞ்சா போதை பொருட்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாக கூறினார் என்றும், அவர் அந்த கஞ்சாவை வைத்திருக்க எந்தவிதமான அரசு அனுமதியோ, உரிமமோ இல்லை என்றும், மேற்படி எதிரியை உதவி ஆய்வாளர் 18.20 மணியளவில் குற்றக்காரணம் கூறி கைது செய்தும், எதிரி சார்லஸ் நெப்போலியன் தானாக முன்வந்து

கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் 18.30 முதல் 18.45 மணிக்குள் பதிவு செய்துக்கொண்டு, அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததாலும், போலீஸ் சாட்சிகளான தானும், முதல் நிலை காவலர் ஆனந்த்குமார் அவர்களும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், பின்னர் 18.50 மணியளவில் எதிரி வசமிருந்த 400 கிராம் கஞ்சா உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் மூலமாக கைப்பற்றினார் என்றும், அதிலும் தானும், முதல் நிலை காவலர் ஆனந்த்குமார் என்பரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மசரில் உள்ள 1வது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அதிலிருந்து 100கிராம் கஞ்சாவை இரண்டு காக்கி கவரில் உதவி ஆய்வாளர் தனியாக எடுத்து இரசாயன பரிசோதனைக்கு அனுப்புவதற்காக எடுத்து வைத்திருந்தார் என்றும், பின்பு, எதிரியுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.281/2023 சட்டப்பிரிவு 8(c), 20(b)(ii)(A) NDPS Act. ன் கீழ் உதவி ஆய்வாளர் 19.00மணிக்கு வழக்கு பதிவு செய்வதற்கு தானும், முதல் நிலை காவலர் ஆனந்த்குமார் என்பவரும் உதவியாக இருந்தோம் என்றும், உதவி ஆய்வாளர் விசாரிக்க நடந்த விபரத்தைச் சொன்னேன் என்றும் கூறி சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1ன் மூலம் அ.சா.ஆ.1 மற்றும் ஆ.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**11.** அ.சா.2 கூடுதல் சாட்சி தனது சாட்சியத்தில், கடந்த 11.05.2023ம் தேதி திருவாரூர் நகர காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது தானும் தன்னுடன் பணிபுரிந்த முதல்நிலை காவலர் ஆனந்த்குமார் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் அவர்கள் முன்னிலையில் அவருக்கு கிடைத்த ரகசிய தகவலை பெற்று காவல் துறை துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து பின்னர் உதவி ஆய்வாளர் தியாகராஜன் ஆகியோருடன் நிலைய எல்லைக்குட்பட்ட திருவாரூர் பேபி டாக்கீஸ் ரோடு அருகே மாலை 18.00மணிக்கு கண்காணித்து வந்தபோது சந்தேகத்திற்கு இடமான வகையில் நின்றுக் கொண்டிருந்த நபர் தங்களை கண்டதும் ஓட முயன்றவரை பிடித்து விசாரிக்க தங்களது பெயர் சார்லஸ் நெப்போலியன், த/பெ. பரிசுத்தம், பேபி டாக்கீஸ் ரோடு, சீராத்தோப்பு, திருவாரூர் என்று கூறினார் என்றும், அவர்தான் ஆஜர் எதிரியாவார் என்றும், அவரை சோதனை செய்ய அனுமதி கோரிய போது அவர் என்னை சோதனை இடலாம் என்று சம்மத கொடுத்தார் என்றும், அவரை சோதனை செய்த போது எதிரி சார்லஸ்

நெப்போலியன் என்பவரிடம் இரண்டு பொட்டலம் கஞ்சா இருந்தது. அதை எடை மிஷனில் எடை பார்க்க சுமார் 400 கிராம் எடையுள்ள கஞ்சா போதை பொருள் இருந்தது என்றும், அவரை விசாரிக்க கஞ்சா போதை பொருட்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாக கூறினார் என்றும், அவர் அந்த கஞ்சாவை வைத்திருக்க எந்தவிதமான அரசு அனுமதியோ, உரிமமோ இல்லை என்றும், மேற்படி எதிரியை உதவி ஆய்வாளர் 18.20 மணியளவில் குற்றக்காரணம் கூறி கைது செய்தும், எதிரி சார்லஸ் நெப்போலியன் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் 18.30 முதல் 18.45 மணிக்குள் பதிவு செய்துக்கொண்டு, அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததாலும், போலீஸ் சாட்சிகளான சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரசேகர், ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.03ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் எதிரி வசமிருந்த 400 கிராம் கஞ்சா கைப்பற்றுதல் மகசர் மூலமாக கைப்பற்றினேன் என்றும், அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததாலும், போலீஸ் சாட்சிகளான சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் மற்றும் காவலர் ஆனந்த்குமார் அவர்களும் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றும், அதிலிருந்து தலா 100கிராம் கஞ்சாவை இரண்டு காக்கி கவரில் ஆய்வாளர் தனியாக எடுத்து இரசாயன பரிசோதனைக்கு அனுப்புவதற்காக எடுத்து வைத்திருந்தார். பின்பு, எதிரியுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 281/2023 சட்டப்பிரிவு 8(c), 20(b)(ii)(A) NDPS Act. ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன் என்றும், பின்னர் புலன்விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா. 2ன் மூலம் அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**12.**அ.சா.1 மற்றும் அ.சா.2ன் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகள் கையொப்பத்தை தவிர வேறு கையொப்பம் இல்லை என்றால் சரிதான் என்றும், தடய பொருள் கஞ்சாதான் என்பதற்கு ஆதாரமாக தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி சான்றிதழ் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை என்றும், தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வரவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல வெள்ளை நிற பாலீதின் பை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான் என்றும் பதில் அளித்துள்ளார்கள்.

**13.** எனவே, மேற்படி சாட்சிகளின் மூலம் எதிரி கஞ்சா வைத்திருந்தார்

என்பது அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்கையில், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், நிலைய எல்லைக்குட்பட்ட திருவாரூர் பேபி டாக்கீஸ் ரோடு அருகே மாலை 18.00மணிக்கு கண்காணித்து வந்தபோது சந்தேகத்திற்கு இடமான நின்றுக் கொண்டிருந்த நபர் தங்களை கண்டதும் ஓட முயன்றவர்களை பிடித்து விசாரித்து, எதிரி–1 ஐ பரிசோதனை செய்து பார்த்தபோது அவரது பையில் 400 கிராம் அளவுள்ள கஞ்சா பொட்டலம் இருந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**14.**இருப்பினும், மேற்படி சாட்சிகளின் மூலம் எதிரியிடம் வெள்ளை நிற பாலிதீன் பையில் 400 கிராம் போதை பொருளான கஞ்சா வைத்திருந்தார் என்பது அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்கையில், அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது சாட்சியத்தில் அரசு தரப்பில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்ட 400 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார்கள். ஆனால், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயத்தை தடய அறிவியல் துறைக்கு அனுப்பி அறிக்கை பெற்று அதனை இந்நீதிமன்றத்தில் புலன் விசாரணை அதிகாரியால் தாக்கல் செய்யப்படவில்லை, இதனால் எதிரியிடமிருந்து கைப்பற்றிய பொருள் கஞ்சா தான் என்பதற்கு போதிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் இல்லை என கண்டறிய முடிகின்றது. இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள சட்டப்பிரிவு 8(c), 20(b)(ii)(A) NDPS Act குற்றத்தை செய்தார் என ஊர்ஜிதம் செய்ய இயலாது. ஆகையால் இவ்வழக்கு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**15. முடிவாக**, எதிரிகளுக்கு எதிரான சட்டப்பிரிவு 8(c), 20(b)(ii)(A) NDPS Act ன் கீழான குற்றம் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளுக்கு எதிரான சட்டப்பிரிவு 8(c), 20(b)(ii)(A) NDPS Act ன் கீழான குற்றத்தை பொறுத்து எதிரி குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**16.**இவ்வழக்கில் தடயப்பொருள்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ள சி.பி.எண்.63/2024 தடயப்பொருளை நீதிமன்ற மேல்முறையீட்டு காலத்திற்கு

பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தர் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணி மூலம் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு இன்று 20.04.2026ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

LISI G

Digitally signed by LISI G
DN: cn=LISI G, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.20 15:47:49 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்</u>**

1 அ.சா.1 திரு. சந்திரசேகரன் – சிறப்பு உதவி ஆய்வாளர்
2 அ.சா.2 திரு. தியாகராஜன்– உதவி ஆய்வாளர்

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்</u>**

1 அ.சா.ஆ.1 – ஒப்புதல் வாக்குமூலத்தில் அ.சா.1ன் கையொப்பம்
2 அ.சா.ஆ.2 – கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.1ன் கையொப்பம்
3 அ.சா.ஆ.3 – கைப்பற்றுதல் மகசர்
4. அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள் –</u>** உண்டு

| **வ.எண்** | **தடயப்பொருள்** |
|---|---|
| 1. | சி.பி. எண்.63/2024–300 கிராம் கஞ்சாவில் SHO சீல் வைக்கப்பட்டுள்ளது. |

LISI G

Digitally signed by LISI G
DN: cn=LISI G, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.20 15:47:54 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.

**குறிப்பு**

1. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு எதிரிக்கும்/காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. தீர்ப்புரை நகல் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.